முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1060

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.08.2022**, புதன்கிழமை

1. சரவணச்சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஆறுமுக அரங்கனே
அறமெனும் உன் சக்திதனை ஏற்று
ஆறுமுகன் யான் இனிதே ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 08 நாள், 24.08.2022 புதன்கிழமை)
2. ஆசிதனை அரங்கனுக்கு எடுத்துரைப்பேன்
ஆற்றல்பட அரங்கனுள் யானிருந்து அற்புதத்தை உலகிற்கு தந்துவர
வருகவே மாற்றமெனக் கருதி
வையகத்தார் ஞான வழி வருவதற்கு
3. தருகின்ற அரங்கன் தர்மத்தை கைக்கொண்டு
தவமாக அரங்கன் சன்மார்க்கத்தை ஏற்றுவர
வருகவே உலகம் மாற்றம் பெறும்
வையகத்தில் சைவ நெறி தழைத்து
4. தழைத்துமே இந்த உலகம் பாதுகாப்புப் பெற
தண்டாயுதன் என் ஆட்சிக்கு வர
பிழையற ஞானவான்களாக மாறவேண்டும்
பேருலகம் எங்கும் அரங்கன் புகழ் பரவவேண்டும்
5. வேண்டியே அரங்கன் தொடர்பில்
விடாது உலகோர் வந்தால்
உண்டான சகல தடைகளும் அகன்றோடி
உலகமே ஞானலோகம் ஆகி
6. இனிதே ஞானிகள் ஆட்சியும்
ஞானசித்தர் ஆட்சிக் காலமுமாக
மாற்றம் கண்டு சிறப்புகூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–